## தொழிற் முன்னேற்ற பாதை

# குழாய் பொருத்துநர்

## (பிளம்பர்)



### ஐடிஐ-யில் பயிற்றுவிக்கப்படும் திறன்கள்:

- பலவகை பைப்களைப் பற்றியும் அவற்றில் பிட்டிங்குகள் பொருத்தி செய்யப்படும் வேலைகளைப் பற்றியும் அறிந்துகொள்ளுதல்
- பலவகை கட்டிடங்களில் குழாய் இணைப்பு தருதல், கழிவுநீர், அசுத்த நீர் மற்றும் மழைநீர் வெளியேற்றும் திட்டங்களைப் பற்றி தெரிந்து கொள்ளுதல்
- மழைநீர் வெளியேற்றம், மழை நீர் சேகரிப்பு பற்றி தெரிந்து கொள்ளுதல்
- பைப்லைன்கள், பலவகை டேப்கள் மற்றும் வால்வுகளை பொருத்துதல் மற்றும் அவற்றில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்யும் வழிமுறைகளை அறிந்துகொள்ளுதல்
- சுடுநீர் சாதனங்களை நிறுவுதல், மிக்ஸர் குழாய் இணைப்பு வேலைகளின் வழிமுறைகளை தெரிந்து கொள்ளுதல்
- பலவகை பம்ப்செட்களை நிறுவுதல், குழாய் இணைப்பு தருதல், அவற்றை இயக்குதல், பழுதுநீக்கி பராமரித்தல் வேலைகளைப் பற்றி தெரிந்துகொள்ளுதல்

### தொழில் நிறுவனங்கள் எதிர்பார்க்கும் திறன்கள்:

- பல்வேறு வகையான மெட்டல் மற்றும் நான்மெட்டல் பைப்களைப் பயன்படுத்தி வாட்டர் சப்ளை இணைப்பு தருதல், பழுதுகளை சரிசெய்தல் மற்றும் பராமரித்தல்
- S.T.P & W.W.T.P (கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்) போன்றவற்றை இயக்குதல், பழுதுகளை சரிசெய்து பராமரித்தல்
- வாட்டர் டிரீட்மெண்ட் பிளான்ட்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல்
- சுடுநீர் விநியோக சாதனங்களை பொருத்துதல், இயக்குதல் மற்றும் பழுதுகளை சரிசெய்து பராமரித்தல்
- கழிவறை சாதனங்கள், கழிவுநீர் சேகரிக்கும் தொட்டிகள், கழிவுநீர் வெளியேற்றும் அமைப்புகளை முறையாக பழுதுகளை சரிசெய்து பராமரித்தல்
- பையர் ஹைட்ரண்ட்கள் மற்றும் பையர் ஹோஸ்கள், தீயணைப்பு சாதனங்கள் வாட்டர் பவுண்டெயின் போன்றவற்றை முறையாக பராமரித்தல்

### ஐடிஐ முடித்தபின் வேலைவாய்ப்புகள்:

- தொழிற்பயிற்சி நிலையங்களில் பணிமனை மற்றும் பண்டக உதவியாளர்.
- தொழிற்சாலைகள், வர்த்தக நிறுவனங்கள், வணிக வளாகங்கள், தியேட்டர்கள் போன்றவற்றில் பிளம்பிங் மெயின்டனன்ஸ் பணிகள்.
- கல்வி நிறுவனங்கள், பயிற்சி நிலையங்கள் போன்றவற்றில் பிளம்பிங் அமைப்புகளை நிறுவுதல் மற்றும் பராமரித்தல்.
- அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள், அரசு அலுவலங்கள், மருத்துவமனை போன்றவற்றில் நீரிணைப்பு, நீர் விநியோகம் மற்றும் பராமரித்தல்.
- நீர் சுத்திகரிப்பு நிலையங்களில், ஆப்ரேட்டர் டெக்னீஷியன், பிளம்பர் போன்ற பணியிடங்கள்.



### ஐடிஐ முடித்தபின் என்னவாகலாம்:

#### ஆரம்ப நிலை

பிளம்பர் (ஹெல்பர் / அசிஸ்டன்ட் / வெல்டர்)
பிளம்பர் (பராமரித்தல் மற்றும் சர்வீசிங் அசிஸ்டன்ட்) பிளம்பிங் மேஸன், பிளம்பிங் பைப்பிட்டர் அசிஸ்டன்ட், பணிமனை உதவியாளர் மற்றும் பண்டக உதவியாளர்

#### இடை நிலை

பிளம்பர், பிளம்பர் பராமரித்தல் மற்றும் சர்வீசிங், பிளம்பர் பைப்லைன், பிளம்பர் பிட்டர், பிளம்பர் வெல்டர், குழாய் ஆய்வாளர் கான்டிராக்டர்

#### மூத்த நிலை

பிளம்பிங் போர்மேன், பயிற்சி அலுவலர், பிளம்பிங் சூப்பர்வைசர், பிளம்பிங் சைட் இன்ஜினியர், பிளம்பர் (பம்புகள் மற்றும் E/M மெக்கானிக்), லைசென்ஸ்டு கான்டிராக்டர்

### ஐடிஐ முடித்தபின் என்ன படிக்கலாம்:

- லேட்ரல் என்ட்ரி மூலம் டிப்ளமோ இன்ஜினியரிங் பிரிவுகளில் சேரலாம்
- தொழிற்பழகநர் பயிற்சி பெற்று தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழ் பெறுதல்
- NSTI-ல் CITS பிளம்பர் பயிற்சி பெற்று ITI களில் பிளம்பர் பிரிவு, இளநிலை பயிற்சி அலுவலராக சேருவதற்கு தகுதிநிலை வளர்த்தக்கொள்ளுதல்





QUEST ALLIANCE

வாய்மையே வெல்லும்

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

Industrial Training Institute